සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
கலாசார அலுவல்கள் திணைக்களம்
Department of Cultural Affairs

8 වන මහල සෙත්සිරිපාය බත්තරමුල්ල 8ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல.8th floor,Sethsiripaya, Battaramulla
සොඳුරු දේශයක පෙරගමන්කරු வளமான தேசத்தை நோக்கி முன் செல்பவர். *Trailblazer of a Beautiful Nation*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. | DCA/05/04/2025 | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 2025.04.25 |

හිතුණු හැදුණු පිරුණු සොඳුරු මිනිසුන් සපිරි පින්බර දේශයක් එක්ව ගොඩනගමු
அமைதியான, ஒழுக்கமான, முழுமையான சிறந்த மனிதர்களைக் கொண்ட தேசத்தை ஒன்று சேர்ந்து கட்டியெழுப்புவோம்.
Towards building a blessed nation of compassionate, complete and culturally rich human beings

திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் : 04/2025

சகல மாவட்டச் செயலாளர்கள் / பிரதேச செயலாளர்கள்,

<u>பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய இலக்கிய விழா – 2025</u>

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் நடாத்தப்பட்டு வருகின்ற தேசிய இலக்கிய விழாவானது, இவ்வாண்டிலும் **பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய மட்டத்தில் 03 கட்டங்களின் கீழ் செயற்படுத்தப்படவுள்ளது.**

**நோக்கங்கள்**

- கலையானது ஊடகம் ஒன்றாக இலக்கியக் கலையினை மேம்படுத்துதல்.
- சமூகத்தில் காணப்படும் இலக்கியக்கலை தொடர்பான மனப்பாங்கினை உருவாக்குதல்.
- பிரதேச இலக்கியவாதிகளின் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல்
- புதிய தலைமுறையினர் மத்தியில் புத்தகங்களின் பயன்பாடு, மற்றும் வாசிப்புத்திறனை விருத்தி செய்தல்.
- சிறுவயது மற்றும் இளவயது படைப்பாளிகளை புதுப்பிப்பது தலைப்புக்கள் ஊடாக படைப்பாக்கவியலில் ஈடுபடச் செய்தல்.
- பொதுவாக இலக்கியக் கலைரசனையினை சமூக மயப்படுத்துவதன் மூலம் இரசனை மிகுந்த, பலத்தினையுடைய உணர்வுபூர்வமான எதிர்கால சமூகம் ஒன்றினை உருவாக்குதல்.

<u>போட்டிகளின் ஒழுங்கமைப்புத் திட்டம்</u>

பிரதேச, மாவட்ட மட்டப் போட்டிகள் பிரதேச செயலகம் மற்றும் மாவட்டச் செயலகங்கள் ஊடாக நடாத்தப்படும். தேசிய மட்ட இறுதிக் கட்டப் போட்டிகள் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் நடாத்தப்படும்.

<u>பிரதேச இலக்கிய போட்டிகள்</u>

- **இதன் ஆரம்ப கட்ட போட்டிகள், அதாவது பிரதேச மட்டப் போட்டிகள் பிரதேச செயலகம் ஊடாக நடாத்தப்படல் வேண்டும்.** பிரதேச செயலகங்களால் தனது அதிகாரப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில், கலைக் கழகங்கள், கலை நிறுவனங்கள், அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள், பல்கலைக்கழகம், மற்றும் கலாசார அதிகார மன்றங்கள் உட்பட நிறுவனங்கள் மற்றும், ஊக்கத்தினைக் கொண்டுள்ள பிரிவினர்களுக்கு பிரதேச மட்ட இலக்கியப் போட்டிகள் தொடர்பில் எழுத்துமூலம் அறிவிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன், பொதுமக்கள் நடமாடும் இடங்களில் பகிரங்க அறிவித்தல்களை வெளியிடுவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| අධ්‍යක්ෂ<br>பணிப்பாளர்<br>Director | 2872035 | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office | 2872031<br>2866731 | ෆැක්ස්<br>தொலைநகல்<br>Fax | 2866732 | ඊ-මේල්<br>மின்னஞ்சல்<br>E-mail | dcanews@sltnet.lk | වෙබ් පිටුව<br>இணையத்தளம்<br>Web Site | www.culturaldept.gov.lk |

- ❖ மாவட்ட மற்றும் தேசிய மட்டக் கட்டங்களின் மதிப்பிடலுக்கு உட்படுத்தப்படுவது இந்த ஆரம்ப கட்ட போட்டிகள் ஊடாக தெரிவு செய்யப்படும் ஆக்கங்களாகும் என்பதனால், தேசிய மட்டப் போட்டிக்கு பொருத்தமான விதத்தில் தரம் வாய்ந்த விதத்திலான ஆக்கங்களை தரமான ஆக்கங்களை அதிகமாக தெரிவு செய்து கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதுடன் அதன் பொருட்டு தகுதி வாய்ந்த மத்தியஸ்தர் குழு ஒன்றின் கீழ் போட்டிகளை மத்தியஸ்தம் செய்ய பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

- ❖ சகல போட்டிப் பிரிவுகளின் பொருட்டு மிகவும் அதிகமான படைப்பாளிகளை கலந்துகொள்ளச் செய்ய நடவடிக்கைகளை ஏற்படுத்திக் கொடுப்பது உரிய உத்தியோகத்தர்களின் பொறுப்பாகும். அத்தோடு படைப்பாளிகளின் படைப்புக்களை உருவாக்கும் பொருட்டு பங்களிப்புச் செய்து கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். பகிரங்க அறிவித்தல்கள், சமூக வலைத்தளங்களை பயன்படுத்துதல் போன்றவை.

- ❖ ஆக்கங்களைப் பொறுப்பேற்றல் மற்றும் செயற்பாட்டு ரீதியான போட்டிகளை 2025 ஜுலை மாதம் 30ம் திகதியில் முடிக்கப்படல் வேண்டும்.

- ❖ படைப்புக்களை மத்தியஸ்தம் செய்யும் பொருட்டு அந்தந்த போட்டிப் பிரிவுகளில் போதியளவு விடய அறிவுள்ள மூவரடங்கிய நடுவர் குழுவொன்றினை பிரதேச செயலாளரின் சிபாரிசின் பிரகாரம் நியமித்துக் கொள்ளல் வேண்டும்.

- ❖ ஒவ்வொரு போட்டிப் பிரிவுகள் மூலம் முதலாமிடத்தை பெற்ற ஆக்கத்துடன் முதலாம், இண்டாம் மற்றும் மூன்றாமிடங்களை பெற்ற வெற்றியாளர்களின் பெறுபேற்று அட்டவணையினை மாவட்டச் செயலாளருக்கு குறித்த பிரதேச செயலாளரின் அங்கீகாரத்துடன் 2025 ஆகஸ்ட் 15ம் திகதி அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும் (இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்ற ஆக்கங்களை தேவைப்படும் சந்தர்ப்பங்களில் பரீட்சிப்பதற்காக பெற்றுக் கொள்ளக் கூடிய பிரகாரம் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளல் வேண்டும்.

- ❖ பிரதேச இலக்கிய விழாவினை செப்டம்பர் மாதம் முடிவடைய முன்னர் நடாத்தி முடிப்பற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

<u>மாவட்ட இலக்கிய போட்டிகள்</u>

- ❖ அந்தந்த மாவட்டங்களுக்குரிய சகல பிரதேச இலக்கிய போட்டிகளின் பெறுபேற்றினை 2025 ஆகஸ்ட் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் மாவட்ட செயலகத்திற்கு வரவழைத்துக் கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

- ❖ ஆக்கங்களுக்கான மத்தியஸ்தத்தினை மேற்கொள்ளும் பொருட்டு ஒவ்வாரு போட்டிப் பிரிவுகள் தொடர்பில் போதியளவு அறிவினைக் கொண்ட ஆகக் குறைந்தது மூவரைக் கொண்ட மதிப்பீட்டுக் குழு ஒன்றினை மாவட்ட செயலாளரின் சிபாரிசின் பிரகாரம் நியமித்துக் கொள்ளல் வேண்டும்.

- ❖ மாவட்ட மட்டத்தில் ஒவ்வொரு போட்டிப் பிரிவுகளுக்குமுரியதாக முதலிடத்தில் வெற்றி பெற்ற ஆக்கத்துடன் முதலாம், இரண்டாம், மற்றும் மூன்றாமிடத்தினைப் பெற்றுக் கொண்ட வெற்றியாளர்களின் போட்டிப் பெறுபேற்று அட்டவணையினை மாவட்ட செயலாளரின் சிபாரிசுடன் 2025 ஒக்டோபர் மாதம் 01ம் திகதிக்கு முன்னர் கலாசார அலுவல்கள் பணிப்பாளருக்கு முன்வைக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேணடும்.

- ❖ மாவட்ட இலக்கிய விழா 2025 நவம்பர் மாதம் முடிவடைய முன்னர் நடாத்த நடவடிக்கைளை மேற்கொள்ளல் வேண்டும்.

<u>தேசிய இலக்கிய போட்டிகள்</u>

- ❖ ஒவ்வொரு போட்டிப் பிரிவுகளுக்குமுரியதாக மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தினைப் பெற்றுக் கொண்ட ஆக்கங்கள் அறிஞர்களைக் கொண்ட மூன்று மத்தியஸ்தர் குழுக்களுக்கு சமர்ப்பிக்கப்படும்.

- ❖ மாவட்ட மட்டத்தில் செயற்பாட்டு ரீதியான போட்டிகளில் முதலாமிடத்தினைப் பெற்ற வெற்றியாளர்களின் பொருட்டு நடாத்தப்படும் செயற்பாட்டு ரீதியான போட்டிகள் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் தெரிவு செய்யப்படும் இடமொன்றில் முன் அறிவித்தல் ஒன்று மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் நடாத்தப்படும்.

- ❖ தேசிய மட்டத்தில் ஒவ்வொரு போட்டிப் பிரிவுகளுக்குமுரிய முதலாம், இரண்டாம், மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொண்ட வெற்றியாளர்களின் போட்டிப்பெறுபேற்று அட்டவணையினை சகல மாவட்ட செயலாளர்களுக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்படும்.

- ❖ கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் தெரிவு செய்யப்பட்ட இடம் மற்றும் திகதியில் தேசிய இலக்கிய விழா நடைபெறும்.

<u>போட்டி விபரங்கள்</u>

| தொடர் இலக்கம் | வயதுத் தொகுதி | போட்டிப் பிரிவு |
|---|---|---|
| 01. | 05 – 07 வயதுகளுக்கு இடைப்பட்டது | பாலர் பிரிவு |
| 02. | 08 - 10 வயதுகளுக்கு இடைப்பட்டது | சிறுவர் பிரிவு |
| 03. | 11 - 14 வயதுகளுக்கு இடைப்பட்டது | கனிஷ்ட பிரிவு |
| 04. | 15 - 16 வயதுகளுக்கு இடைப்பட்டது | சிரேஷ்ட பிரிவு |
| 05. | 17 - 19 வயதுகளுக்கு இடைப்பட்டது | அதி சிரேஷ்ட பிரிவு |
| 06. | 19 வயதிற்கு மேற்பட்ட | திறந்த பிரிவு |

## 1. பாலர் பிரிவு (5-7 வயதுக்கு இடைப்பட்டவர்கள்)

### 1.1 கதை சொல்லும் போட்டி

தான் கேட்டு இரசித்துள்ள கதையொன்றினை சிறந்த விதத்தில் 2-3 நிமிட காலத்திற்குள் ஆக்கபூர்வமாக முன்வைப்பது இங்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது. மாணவர்களின் பள்ளிக் காலத்தின் ஆரம்ப கால எல்லை என்பதன் காரணமாக முன்பள்ளியில் பெற்ற அனுபவங்களை முன்வைத்து மிக ஆக்கபூர்வமான விதத்தில் இப்போட்டிகளை நடாத்த எதிர்ப்பார்க்கப்டுகின்றது. கதை சொல்வதற்கு பொருத்தமான வடிவமைப்பில் ஆடைகள் அல்லது பாடசாலை சீருடைகளை அணிந்து இதனை மேற்கொள்ள முடியும்.

புள்ளிகளை வழங்கும்போது குரல் வளம், சரியான மொழிப்பயன்பாடு, கதையினை ஆக்கபூர்வமாக கட்டியெழுப்புதல் படைப்பாக்கத்துடன் முன்வைத்தல் மற்றும் சமூகத்திற்கு சொல்லப்படும் செய்தி தொடர்பிலும் கவனஞ் செலுத்தப்படும்.

## 2. சிறுவர் பிரிவு (8-10 வயதுகளுக்கிடைப்பட்டவர்கள்)

### 2.1 சிறுவர் கதை ஆக்கப்போட்டி

சிறார்களின் படைப்பாக்கச் சிந்தனைகளை விருத்தி செய்வது இங்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது. அவர்களது விருப்பத்தின் பிரகாரம் ஓவியப் பதிவுகளுடனானதாக முன்வைக்கப்படுகின்ற A4 அளவினையுடைய தாளின் 02 பக்கங்களுக்கும் மேற்பட்ட (தனிப்பக்கத்தினை மாத்திரம் பயன்படுத்தவும்) எழுத்துமூல புதிய சிறுவர் கதை ஒன்றாக இருத்தல் வேண்டும்.

சிறுவர் கதையானது நிறுத்தற்குறி, தெளிவான கையெழுத்தில், வாசிக்கக் கூடிய விதத்தில் இருத்தல் வேண்டும். முழுக் கதையின் படைப்பாக்கம் மற்றும் சமூகத்திற்கு வழங்கப்படுகின்ற செய்தி என்பன போட்டி நிபந்தனையாக கருதப்படுகின்றது.

### 2.2 நாட்டார் பாடல்கள்

தான் விரும்பும் நாட்டார் பாடல் ஒன்றினை தெரிவு செய்து கொண்டு இந்த இடத்தில் ஆற்றுகைப்படுத்துவது எதிர்ப்பார்க்கப்படுகின்றது.
(இசைக் கருவிகள் பயன்படுத்துவதனை தவிர்த்தல் வேண்டும்.)

## 3. கனிஷ்ட பிரிவு (11-14 வயதுகளுக்கு இடைப்பட்டவர்கள்)

### 3.1 நாட்டார் கதை மீளாக்கம் செய்யும் போட்டி.

பண்டைய மக்களிடத்தேயே உருவாகியுள்ள வாய்மொழி பாடல் மூலமாக தொடர்ந்து வரும், நாட்டார் கதைகளின் வர்ணணைகள் அதிகப்படியாக எமது சமூகத்தில் காணப்படுகின்றது. இவ் வயதுத் தொகுதிகளின்

சிறார்களை நாட்டாரியல் நடைமுறையினை அறிந்து, அதன் பொருட்டு உள்ள அக்கறையினை விருத்தி செய்வதனை நோக்கமாகக் கொண்டு நடாத்தப்படுகின்ற இப் போட்டியின் மூலம் சிறுவர் சமூகத்தினருக்கு முக்கியத்துவம் வாய்ந்த, வழிகாட்டல்கள், அல்லது முக்கியமான கருத்துக்களுடனான நாட்டார் கதைகளை கேட்டறிந்து இரசித்து அதன் இலக்கிய ரீதியான பண்புகள் வெளிவரக் கூடிய பிரகாரம் படைப்பாக்கபூர்வமாக முன்வைப்பது இங்கு எதிரப்பார்க்கப்படுகின்றது.

தனது விருப்பத்தின் பிரகாரம் மேற்படி நாட்டார் கதையினை தெரிவு செய்து மீள் படைப்பாக்கம் செய்யும் போது 750 – 1000 இற்குமிடைப்பட்ட சொற்களுக்குள் ஒரு தாளில் அமைதல் வேண்டும் என்பதுடன் கையெழுத்து, மொழி ஆற்றல் எழுத்தமைப்பு உட்பட இலக்கிய நயத்தினை வெளிக்கொணரக்கூடிய பிரகாரம் ஆக்கபூர்வமாக சமர்ப்பித்து சமூகத்திற்கு சொல்லப்படும் செய்திகள் தொடர்பில் கவனத்தினைச் செலுத்தி புள்ளிகளை வழங்குதல் வேண்டும்.

### 3.2 கவிதை ஆக்கம் - மரபுக்கவிதை / புதுக்கவிதை

விரும்பிய தலைப்பொன்றில் மரபுக் கவிதை / புதுக்கவிதைப் படைப்பாக்கமொன்று இங்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

மொழி அலங்கரிப்பு, சீர்கள், உட்பட பலதரப்பட்ட மொழிப் பயன்பாட்டின் மூலம் வடிவமைக்கப்பட்ட செய்யுள்களை ஆக்க முடியும் புள்ளிகளை வழங்கும்போது மேலுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் ஆக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என கவனஞ் செலுத்தப்படவுள்ளது.

### 3.3 பாடல் நயத்தல் போட்டி

பிரதேச ரீதியான போட்டிகளின் பொருட்டு தாளக்கட்டுப்பாட்டுடன் அமைந்ததாக அல்லது தாள முறைகளற்றதாகவோ அமைந்த வரலாற்றுக் கதைகளில் உள்ள கவிதைகள் /கவிதை நூல்களில் தெரிவு செய்யப்பட்டதாகவோ/சமூக ஊடகங்களூடாக கிடைக்கப்பெற்ற கவிதைகள் /நாட்டார் இலக்கியங்கள், நாட்டுக் கூத்து மற்றும் நாட்டிய நாடக, இதிகாசங்களில் காணப்படுகின்ற கவிதைகளில் இருந்து 03 இனை முன்வைத்தல் வேண்டும். (ஒரு கவிதையில் 12 வரிகளுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்)

மாவட்ட மட்ட போட்டியின் பொருட்டு பிரதேச மட்டத்தில் தெரிவு செய்த 03 கவிதைப்பாடல்களுடன் சஞ்சிகைகள் சார்ந்தவற்றிலிருந்து தெரிவு செய்து கொள்ளப்பட்ட செய்யுள் பாடல், இசை நாட்டியம் அல்லது நாடகப்பாடல் சார்ந்தாக தெரிவு செய்யப்பட்ட பாடல் ஒன்றாக 04 பாடல்களை முன்வைத்தல் வேண்டும். (ஒரு கவிதையில் 12 வரிகளுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்)

இவ்வாறு ஆக்கங்களை முன்வைக்கும் போது பாடலுக்குப் பொருத்தமான விதத்தில் நாட்டாரியல் பாடல் ஒன்றினை தெரிவு செய்வதற்கும் அங்க அசைவு, அபிநயம் தொடர்பிலும் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். பாடல் முக்கியமாக மதிப்பிடப்படுவதுடன் புள்ளிகளை வழங்கும் போது தெளிவான மற்றும் சிக்கலற்ற உச்சரிப்புக்கள், குரல் வளம் போன்ற விடயங்கள் தொடர்பிலும் கவனஞ் செலுத்தப்படும்.

(போட்டிகளில் கலந்து கொள்ளும் போது போட்டியாளர்கள் இசைக் கருவிகளை பயன்படுத்தலாகாது)

## 4. சிரேஷ்ட பிரிவு (வயது 15-16 வயதுகளுக்குட்பட்டவர்கள்)

### 4.1 இலக்கிய விமர்சனப் போட்டி

**கீழ் குறிப்பிடப்படும் படைப்பு இலக்கியங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட நூல்ஒன்று தொடர்பான இலக்கிய விமர்சன கட்டுரையானது 750 தொடக்கம் 1000 வரையான சொற்களுக்கு உட்பட்ட வகையில் விமர்சன இலக்கிய இலக்கன வரண்முறைகளுக்கு அமைவாக அமைதல் வேண்டும்.**

i. சாகித்தியரத்னா தெளிவத்தை ஜோஷப் அவர்களின் **"காலங்கள் சாவதில்லை"** என்ற நாவல்
ii. சாகித்தியரத்னா தெணியான் அவர்களின் **"மரக்கொக்கு"** என்ற நாவல்
iii. சாகித்திய ரத்னா முல்லைமணி அவர்களின் **"மலைக்கோலம்"** என்ற நாவல்

### 4.2 கவிதை ஆக்கம் - மரபுக் கவிதைகள் / புதுக்கவிதைகள்

விரும்பிய தலைப்பொன்றில் மரபுக்கவிதை / புதுக்கவிதை படைப்பாக்கம் ஒன்று இங்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

கவிதை மொழியின் பயன்பாடு, மொழிப்பயன்பாடு, உள்ளடக்கம் மற்றும் புதுமையின் அனுபவம் ஆகிய விடயங்கள் தொடர்பில் கவனத்தினை செலுத்துதல் வேண்டும். புள்ளிகளை வழங்கும் போது இந்த ஆலோசனைக்கேற்ப ஆக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என கவனத்திற் கொள்ளப்படும்.

### 4.3 பாடல் நயத்தல் போட்டி

பிரதேச ரீதியான போட்டிகளின் பொருட்டு தாளக்கட்டுப்பாட்டுடன் அமைந்ததாக அல்லது தாள முறைகளற்றதாகவோ அமைந்த வரலாற்றுக் கதைகளில் உள்ள கவிதைகள் /கவிதை நூல்களில் தெரிவு செய்யப்பட்டதாகவோ/சமூக ஊடகங்களுடாக கிடைக்கப்பெற்ற கவிதைகள் /நாட்டார் இலக்கியங்கள், நாட்டுக் கூத்து மற்றும் நாட்டிய நாடக, இதிகாசங்களில் காணப்படுகின்ற கவிதைகளில் இருந்து 03 இனை முன்வைத்தல் வேண்டும். (ஒரு கவிதையில் 12 வரிகளுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்)

மாவட்ட மட்ட போட்டியின் பொருட்டு பிரதேச மட்டத்தில் தெரிவு செய்த 03 கவிதைப்பாடல்களுடன் சஞ்சிகைகள் சார்ந்தவற்றிலிருந்து தெரிவு செய்து கொள்ளப்பட்ட செய்யுள் பாடல், இசை நாட்டியம் அல்லது நாடகப்பாடல் சார்ந்தாக தெரிவு செய்யப்பட்ட பாடல் ஒன்றாக 04 பாடல்களை முன்வைத்தல் வேண்டும். (ஒரு கவிதையில் 12 வரிகளுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்)

இவ்வாறு ஆக்கங்களை முன்வைக்கும் போது பாடலுக்குப் பொருத்தமமான விதத்தில் நாட்டாரியல் ஒன்றினை தெரிவு செய்வதற்கும் அங்க அசைவு, அபிநயம் தொடர்பிலும் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். பாடல் முக்கியமாக மதிப்பிடப்படுவதுடன் புள்ளிகளை வழங்கும் போது தெளிவான மற்றும் சிக்கலற்ற உச்சரிப்புக்கள், குரல் வளம் போன்ற விடயங்கள் தொடர்பிலும் கவனஞ் செலுத்தப்படும்.

(போட்டியாளர்கள் போட்டிகளில் கலந்து கொள்ளும் போது இசைக்கருவிகள் பயன்படுத்தலாகாது)

## <u>5. அதி சிரேஷ்ட பிரிவு (17-19 வயதுகளுக்கிடைப்பட்டவர்கள்)</u>

### 5.1 இலக்கிய விமர்சன போட்டி

கீழ் குறிப்பிடப்படும் நூல்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட நூல் ஒன்று தொடர்பில் 1000 - 1500 சொற்களுக்குள் இலக்கிய விமர்சனம் ஒன்று எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

i. தமயந்தி சிவசுந்தரலிங்கம அவர்களின் **“காடுலாவு காதை”** நாவல்
ii. ஆசி கந்தராஜா அவர்களின் **“அகதியின் பேர்ளின் வாசல்”** நாவல்
iii. சியாமளா யோகேஸ்வரன் அவர்களின் **“கானல் நீர்”** நாவல்

### 5.2. கவிதை ஆக்கம் - மரபுக் கவிதைகள / புதுக் கவிதைகள்

விரும்பிய தலைப்பொன்றில் எழுதப்படுகின்ற மரபுக்கவிதை அல்லது புதுக்கவிதைப் படைப்பொன்று இங்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

இந்த ஆக்கத்தின் பொருட்டு மொழி அலங்காரம், சீர்கள் மொழிப் பயன்பாடு மற்றும் புதுமையான பொதுவான அனுபவங்கள் ஆகிய விடயங்கள் தொடர்பில் கவனத்தினை செலுத்துதல் வேண்டும். புள்ளிகளை வழங்கும் போது இந்த ஆலோசனைகளுக்கமைய ஆக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என கவனஞ் செலுத்தப்படும்.

### 5.3 பாடல் இரசனை போட்டி

கீழ்குறிப்பிடப்படும் பாடல்களில் இருந்து தான் விரும்பும் பாடல் ஒன்றினைத் தெரிவு செய்து இரசனை மிக்க விமர்சனம் ஒன்றாக 750 – 1000 சொற்களுக்குள் முன்வைப்பது இதன் மூலம் எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

i. டி.எம். சௌந்தர ராஜன் அவர்களால் பாடப்பட்ட **“தூங்காதே தம்பீ தூங்காதே”** என்ற பாடல்
ii. ஹரிஸ் ராகவேந்தரா அவர்களால் பாடப்பட்ட **“நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே”** என்ற பாடல்
iii. க.க ஸ்ரீநிவாஸ் அவர்களால் பாடப்பட்ட **“நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்”** என்ற பாடல்

### 5.4 சிறுகதை ஆக்கம்

உரிய வயதுத் தொகுதி மட்டத்திலான பிள்ளைகளின் ஆக்கபூர்வமான சிந்தனைகளை அடிப்படையாக் கொண்டு சிறுகதை ஆக்கம் சட்டதிட்ட முறைக்குள் உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

### 5.5 பாடல் நயத்தல் போட்டி

பிரதேச ரீதியான போட்டிகளின் பொருட்டு தாளக்கட்டுப்பாட்டுடன் அமைந்ததாக அல்லது தாள முறைகளற்றதாகவோ அமைந்த வரலாற்றுக் கதைகளில் உள்ள கவிதைகள் /கவிதை நூல்களில் தெரிவு செய்யப்பட்டதாகவோ/சமூக ஊடகங்களுடாக கிடைக்கப்பெற்ற கவிதைகள் /நாட்டார் இலக்கியங்கள், நாட்டுக் கூத்து மற்றும் நாட்டிய நாடக, இதிகாசங்களில் காணப்படுகின்ற கவிதைகளில் இருந்து 03 இனை முன்வைத்தல் வேண்டும். (ஒரு கவிதையில் 12 வரிகளுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்)

மாவட்ட மட்ட போட்டியின் பொருட்டு பிரதேச மட்டத்தில் தெரிவு செய்த 03 கவிதைப்பாடல்களுடன் சஞ்சிகைகள் சார்ந்தவற்றிலிருந்து தெரிவு செய்து கொள்ளப்பட்ட செய்யுள் பாடல், இசை நாட்டியம் அல்லது நாடகப்பாடல் சார்ந்தாக தெரிவு செய்யப்பட்ட பாடல் ஒன்றாக 04 பாடல்களை முன்வைத்தல் வேண்டும். (ஒரு கவிதையில் 12 வரிகளுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்)

இவ்வாறு ஆக்கங்களை முன்வைக்கும் போது பாடலுக்குப் பொருத்தமான விதத்தில் நாட்டாரியல் ஒன்றினை தெரிவு செய்வதற்கும் அங்க அசைவு, அபிநயம் தொடர்பிலும் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். பாடல் முக்கியமாக மதிப்பிடப்படுவதுடன் புள்ளிகளை வழங்கும் போது தெளிவான மற்றும் சிக்கலற்ற உச்சரிப்புக்கள், குரல் வளம் போன்ற விடயங்கள் தொடர்பிலும் கவனஞ் செலுத்தப்படும்.

(போட்டியாளர்கள் போட்டியில் கலந்து கொள்ளும் போது இசைக் கருவிகளைப் பயன்படுத்தலாகாது)

<u>6. திறந்த பிரிவு (19 வயதுக்கு மேற்பட்டோர்)</u>

**6.1 திரைப்பட விமர்சனம்**

கீழ் குறிப்பிடப்படும் திரைப்படத்திலிருந்து திரைப்பட ஆக்கமொன்று தொடர்பில் 2500 – 3000 இற்கு இடைப்பட்ட சொற்களைக் கொண்ட விமர்சனம் ஒன்று இங்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

1. மாரி செல்வராஜ் இயக்கத்தில் உருவான **"வாழை"** திரைப்படம்
2. டீ.ஜே. ஞானவேல் இயக்கத்தில் உருவான **"ஜெய் பீம்**" திரைப்படம்
3. கோபி நைனாரின் இயக்கத்தில் உருவான **"அறம்"** திரைப்படம்

**6.2 சிறுகதைப் போட்டி**

சிறுகதை ஆக்கத்தின் போது பயன்படுத்தப்படுகின்ற சட்ட திட்டங்களுக்கேற்ப தாங்கள் விரும்பும் எந்தவொரு தலைப்பிலும் சிறுகதை ஆக்கம் ஒன்றினை முன்வைக்க முடியும்.

**6.3 கவிதை ஆக்கம் - மரபுக் கவிதை**

விரும்பிய தலைப்பொன்றின் கீழ், மரபுக் கவிதை படைப்பொன்று 07 – 10 இற்குமிடைப்பட்ட வரிகளைக்கொண்ட படைப்பாக முன்வைத்தல் வேண்டும்.

மொழி அலங்கரிப்பு சீர் உட்பட பலதரப்பட்ட மொழிப்பயன்பாட்டின் மூலம் வடிவமைக்கப்பட்ட செய்யுள்களை ஆக்க முடியும். புள்ளிகளை வழங்கும் போது மேலுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் ஆக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என கவனத்திற் கொள்ளப்படும்.

**6.4 கவிதை ஆக்கம் - புதுக் கவிதை**

விரும்பிய தலைப்பொன்றின் கீழ் 05-30 இற்கு இடைப்பட்ட புதுக்கவிதை ஆக்கமொன்றினை முன்வைக்க முடியும்.

இப்புதுக்கவிதை ஆக்கத்தின் பொருட்டு பொதுவாக அல்லது விஷேட தரமான மொழிப் பயன்பாட்டினை பயன்படுத்த முடியும். மேலும் புதுக்கவிதை செய்யுள் அலங்கரிப்பின் பொருட்டு எந்தவொரு மொழி அலங்காரத்தினையும் பயன்படுத்த முடியும். புள்ளிகளை வழங்கும்போது மேலுள்ள ஆலோசனைகளுக்கமைய ஆக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என கவனத்திற் கொள்ளப்படும்.

**6.5 சிறுவர் கதை ஆக்கப் போட்டி**

5 – 10 வரையிலான வயதினையுடைய சிறுவர்களுக்கு பொருத்தமான தலைப்பொன்றின் கீழ் சிறுவர் கதையொன்றினை உருவாக்குதல் வேண்டும். எழுத்துருவானது 20 என்ற கணனி அச்சு அளவினை கொண்ட A4 அளவிவான தாளில் 16 பக்கங்களுக்கு மேற்படாத (தனிப் பக்கத்தில் மாத்திரம்) துல்லியமான ஆக்கபூர்வமான கதைப் புத்தகம் ஒன்று இங்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

**<u>மாவட்ட/பிரதேச கலாசார உத்தியோகத்தர்களால் கவனம் செலுத்தப்பட வேண்டிய விசேட விடயங்கள்.</u>**

- சகல போட்டிப் பிரிவுகளும் இச் சுற்றறிக்கையின் ஒழுங்குகளுக்கு ஏற்றார் போல் நடாத்தப்படல் வேண்டும்.

- குறிப்பிட்ட கால வரையறைக்குள் போட்டிகளை நடாத்தி சுற்றறிக்கையில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் பெறுபேற்றுப் பட்டியலின் அட்டவணையின் பிரகாரம் மாத்திரம் குறிப்பிட்ட பிரகாரம் மாவட்டச் செயலகம் அல்லது கலாசார அலுவல்கள் திணைக்களத்துக்கு பெறுபேற்றுப் பட்டியலினை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

- பிரதேசமட்ட போட்டிப் பிரிவுகளில் வெற்றி பெற்ற வெற்றியாளர்களின் பெறுபேற்றுப் பட்டியலையும் முதலாம் இடத்தினைப் பெற்ற ஆக்கத்தினை மாத்திரம் உரிய மாவட்ட செயலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியதுடன் மாவட்ட மட்ட போட்டிப் பிரிவுகளில் வெற்றி பெற்ற வெற்றியாளர்களின் பெறுபேற்று பட்டியலையும் முதலாம் இடத்தினை பெற்ற ஆக்கத்தினையும் மாத்திரம் கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு முன் வைத்தல் வேண்டும்.

- மாவட்ட மட்ட பெறுபேறுகளை கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கும் போது குறித்த விண்ணப்ப படிவத்துடன் வெற்றி பெற்றவரின் பாஸ்போர்ட் அளவிலான புகைப்படம் ஒன்றினையும் முன் வைப்பது கட்டாயமானதாகும்.

- மாவட்ட செயலகத்தினால் கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற ஆக்கங்கள் மீள உரிய போட்டியாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட மாட்டாது எனவும் அப்படைப்புக்களின் பிரதி ஒன்றினை தன்னகத்தே வைத்துக் கொள்ள போட்டியாளர்களுக்கு விளக்கத்தோடு அறிவிக்கப்படல் வேண்டும்.

- ஒவ்வொரு போட்டிப் பிரிவுக்கும் உரிய பிரதேச மட்டத்தில் வெற்றி பெறுகின்ற போட்டியாளர்களின் பொருட்டு கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற சான்றிதழ்கள் உரிய மாவட்ட செயலகங்களுக்கு ஒப்படைக்கப்படும். அச்சான்றிதழ்களை மாவட்ட செயலகத்தால் பிரதேச செயலகங்களுக்கு தாமதமின்றி ஒப்படைத்து அதனைப் பொறுப்பேற்றதற்கான கையொப்ப பட்டியலின் பிரதி ஒன்றினை கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு வழங்குதல் வேண்டும்.

- சுற்றறிக்கை மூலம் முன்வைக்கப்பட்டுள்ள போட்டிப் பிரிவுகளுக்கு மாற்றமாக நடாத்தப்படுகின்ற எந்த ஒரு போட்டி பிரிவின் பொருட்டும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் சான்றிதழ்கள் வழங்கப்பட மாட்டாது. பிரதேச/மாவட்ட மட்ட போட்டிகளின் பொருட்டு கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற சான்றிதழ்கள் உரிய போட்டிப் பிரிவுகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாத்திரம் வழங்கப்படல் வேண்டும். எந்தவொரு போட்டிப் பிரிவுக்கும் திறமைச் சான்றிதழ்கள் வழங்கப்பட மாட்டாது.

- ஒருமுறை சான்றிதழ்கள் வழங்கப்பட்டதன் பின்னர் எக்காரணத்தின் அடிப்படையிலாவது அல்லது கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் மீள சான்றிதழ்கள் வழங்கப்பட மாட்டாது

- கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பணிபுரியும் எந்த உத்தியோகத்தரும் அல்லது அவ்வாறான உத்தியோகத்தர் ஒருவரின் குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் மாவட்ட/பிரதேச செயலகத்தில் கலாசார விடயப் பொறுப்பு உத்தியோகத்தர் ஒருவரோ அல்லது அவ்வாறான உத்தியோகத்தர் ஒருவரின் குடும்ப அங்கத்தவர்களுக்கோ இப்போட்டியின் பொருட்டு விண்ணப்பிக்க முடியாது என்பதனை விசேடமாக சுட்டிக் காட்டப்படுகின்றது.

## பிரதேச மாவட்ட மற்றும் தேசிய இலக்கிய விழாவின் பொருட்டான பொது நிபந்தனைகள்.

- ❖ இப்போட்டிகளின் பொருட்டு முன்வைக்கப்படுகின்ற சகல ஆக்கங்களும் சுய படைப்புக்களாக இருக்க வேண்டியதுடன் அந்த ஆக்கங்கள் இதற்கு முன்னர் எந்த ஒரு போட்டியிலும் முன்வைக்கப்படாத ஆக்கமாக இருத்தல் வேண்டும் விண்ணப்பதாரியின் விருப்பத்தின் பிரகாரம் சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஆக்கங்களை முன்வைக்கலாம்.

- ❖ எந்த ஆக்கத்தின் பொருட்டும் செயற்கைப் புலமை (AI) தொழில்நுட்பம் பயன்படுத்தலாகாது என்பதுடன் சமூக ஊடகங்கள் அல்லது பிற ஊடகம் ஒன்றில் பிரசுரிக்கப்பட்ட படைப்பாளி ஒருவரின் படைப்புக்களை பிரதி பண்ணாது தனது ஆக்கத்தினை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறான படைப்பு தொடர்பில் குறித்த படைப்பின் உரித்தாளியால் மேற்கொள்ளப்படுகின்ற சட்ட ரீதியான செயற்பாடுகள் தொடர்பில் கலாசார அலுவல்கள் திணைக்களம் பொறுப்பேற்காது.

- ❖ போட்டியாளர் ஒருவருக்கு போட்டி நிபந்தனைகளுக்கு இசைய பல போட்டிப் பிரிவுகளிலும் கூட கலந்து கொள்ளலாம். ஒரு போட்டிப் பிரிவின் பொருட்டு ஒரு ஆக்கத்தினை மாத்திரமே சமர்ப்பிக்க முடியும்.

- ❖ எழுத்து மூல ஆக்கங்களை தனது விருப்பத்தின் பிரகாரம் கையெழுத்தாவோ அல்லது தட்டச்சிட்டோ முன்வைக்க முடியும் என்பதுடன் அதன் பொருட்டு புல்ஸ்கேப் தாள் அல்லது A4 தாளின் ஒரு பக்கத்தினை பயன்படுத்தல் வேண்டும். ஆக்கங்கள் மேற்கொள்ளப்பட்ட தாளில் எவ்வித அடையாளமோ விசேட குறிப்புக்களையோ தனது பெயரையோ அல்லது பிற தகவல்களையோ நுழைப்பதனை போட்டியாளர்கள் தவிர்த்தல் வேண்டும்.

- ❖ போட்டியில் கலந்து கொள்ளும் போட்டியாளர்கள் தங்களது ஆக்கங்கள் சுயமான ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அதன் பொருட்டு தனது சமயத்தலத்தின் பிரதம மதகுரு, பிரதேச செயலாளர் பாடசாலை அதிபர் கலை நிறுவனம் ஒன்றின் தலைவர் ஒருவரின் கையொப்பத்துடன் உத்தியோக இலச்சினை இடப்பட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும். திறந்த பிரிவின் கீழ் கலந்து கொள்ளும் போட்டியாளர்கள் தனது வசிப்பிடம் தொடர்பில் தான் வசிக்கும் கிராம உத்தியோகத்தர் பிரிவின் கிராம உத்தியோகத்தர் ஊடாக உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

- ❖ இந்த ஆலோசனைக்கோவைக்கு மாற்றமாக முன்வைக்கப்படுகின்ற ஆக்கங்கள் பிரதேச மட்டத்தில் பிரதேச செயலாளராலும் மாவட்ட மட்டத்தில் மாவட்ட செயலாளராலும் தேசிய மட்டத்தில் கலாசார அலுவல்கள் பணிப்பாளராலும் போட்டியிலிருந்து நீக்க முடியும்.

- ❖ வெற்றி பெற்ற ஆக்கங்கள் தொடர்பில் முன்வைக்கப்படுகின்ற முறைப்பாடுகளை விசாரித்ததன் பின்னர் அவை உறுதப்படுத்தப்பட்டால் சான்றிதழும் பரிசில்களும் வழங்கப்பட மாட்டாது என்பதுடன் சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பில் விசாரிக்கும் போது அந்த விடயங்கள் உறுதிப்படுத்தப்பட்டால் போட்டி பிரிவுக்குரிய சகல உரிமைகளும் இழக்கப்படும்.

- ❖ சகல போட்டியாளர்களும் தங்களது ஆக்கங்களுடன் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் தயாரித்துள்ள மாதிரி விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து பிரதேச செயலாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

- ❖ இப் போட்டிகளில் சகல கட்டங்களிலும் குறித்த மதிப்பீட்டுக் குழுவினால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்களுக்கு விண்ணப்பதாரிகள் இணங்குதல் வேண்டும் என்பதுடன் மதிப்பீட்டுப்குழுவின் சிபாரிசு அடிப்படையில் கலாசார அலுவல்கள் பணிப்பாளரால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

.........................................................

கே.எஸ்.தில்ஹானி

கலாசார அலுவல்கள் பணிப்பாளர்

## பிரதேச, மாவட்ட – மற்றும் தேசிய இலக்கிய விழா – 2025

**<u>மாதிரி விண்ணப்பப்படிவம்</u>**

1. முழுப் பெயர் : ........................................................................................................

   ........................................................................................................

2. முதலெழுத்துக்களுடன் பெயர் : ........................................................................................

3. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) : ....................................................................

   ........................................................................................................

4. பிரத்தியேக முகவரி : ........................................................................................

5. பிறந்த திகதி : ........................................................................................

6. பிரத்தியேக தொலைபேசி இலக்கம் : ........................................................................................

7. WhatsApp வசதியுள்ள தொலைபேசி இலக்கம்: ........................................................................

8. 2025.01.01 இல் வயது : ஆண்டு ............. மாதம் .............. நாள்.............

9. போட்டிப் பிரிவு : பாலர் ☐ சிறுவர் ☐ கனிஷ்ட ☐ சிரேஷ்ட ☐ அதி சிரேஷ்ட ☐

10. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ........................................................................................

11. பிரிவெனா / பாடசாலை / அறநெறிப்பாடசாலை / கலை நிறுவனங்களின் தகவல்

    நிறுவனத்தின் பெயர் : .................................................. ................................................

    முகவரி : .................................................................................... ..............................

    தொலைபேசி இலக்கம் : ........................................................................................

12. பிரதேச செயலகப் பிரிவு : ........................................................................................

13. மாவட்டம் : ........................................................................................

14. கலந்து கொள்ளும் போட்டி : ........................................................................................

15. மொழி : ............................................... ....................................

16. ஆக்கத்தின் பெயர் : ........................................................................................

**<u>விண்ணப்பதாரியின் கூற்று</u>**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல் எனது அறிவுக்கெட்டிய வரை உண்மையானதும் சரியானதும் எனவும் இவ்விண்ணப்பப்படிவத்தின் தொடர் இலக்கம் 14 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆக்கமானது என்னால் ஆக்கப்பட்டது எனவும் இந்த ஆக்கமானது பிறிதொரு போட்டியின் பொருட்டு சமர்ப்பித்து வெற்றி பெறாத ஆக்கம் ஒன்றாகும் எனவும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் ஆலோசனைகளைப் பின்பற்ற இணங்குவதாகவும் வேறு எந்தவொரு பிரதேச செயலகப் பிரிவிலும் இப் போட்டியின் பொருட்டு கலந்து கொள்வதில்லை எனவும் இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திகதி .....................................

.............................................

**விண்ணப்பதாரியின் கையொப்பம்**

# <u>விண்ணப்பதாரியின் ஆக்கம் என உறுதிப்படுத்தல்</u>

……………………………………………………………………………………………………………என்ற

முகவரியில் வசிக்கும் சங்கைக்குரிய/மாணவன்/மாணவி ………………………………………………………ம் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டதாகவும் மேலும் இலக்கம் 08 இல் குறிப்பிடப்பட்டுள்ள வயது சரியானதும் எனவும் இலக்கம் 14 இன் ஆக்கமானது விண்ணப்பதாரியால் மேற்கொள்ளப்பட்டது எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ……………………………… ………………………………………………………

**உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும் பதவி முத்திரையம்**

மேலே குறிப்பிடப்பட்ட சகல தகவல்களையும் பரீட்சித்ததாகவும், சரியானது எனவும் சிபாரிசு செய்கின்றேன்.

திகதி ……………………………… …………………………………………………

**கலாசார உத்தியோகத்தர் / கலாசார அபிவிருத்தி உதவியாளர் / அபி. உத்தியோகத்தர்கள்**

மேலே குறிப்பிடப்பட்ட ஆக்கமானது போட்டியின் பொருட்டு தகுதியானது என அங்கீகரிக்கின்றேன்.

திகதி ……………………………… …………………………………………………

**பிரதேச செயலாளர் கையொப்பமும் பதவி முத்திரையும்**

**இணைப்பு. 02**

## பிரதேச, மாவட்ட – மற்றும் தேசிய இலக்கிய விழா – 2025

**<u>மாதிரி விண்ணப்பப்படிவம் - திறந்த பிரிவு</u>**

1. முழுப் பெயர் : ……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

2. முதலெழுத்துக்களுடன் பெயர் : ……………………………………………………………………………

3. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) : ………………………………………………………………

……………………………………………………………………………………………..

4. முகவரி : ……………………………………………………………………………………………

5. பிறந்த திகதி : ……………………………………………………………………………………

6. பிரத்தியேக தொலைபேசி இலக்கம் : ………………………………………………………………………

7. WhatsApp வசதியுள்ள தொலைபேசி இலக்கம்: ……………………………………………………………

8. 2025.01.01 இல் வயது : ஆண்டு …….. மாத ……… நாள்……..

9. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ……………………………………………………………………

10. பிரதேச செயலகப் பிரிவு : ……………………………………………………………………………

11. மாவட்டம் : ……………………………………………………………………………………

12. கலந்து கொள்ளும் போட்டி : ……………………………………………………………………………

13. மொழி : ………………………………………… ……………………………

14. ஆக்கத்தின் பெயர் : ………………………………………………………………………………

**<u>விண்ணப்பதாரியின் கூற்று</u>**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல் எனது அறிவுக்கெட்டிய வரை உண்மையானது எனவும் இவ்விண்ணப்பப்படிவத்தின் தொடர் இலக்கம் 12 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆக்கமானது என்னால் ஆக்கப்பட்டது எனவும் அந்த ஆக்கமானது பிறிதொரு போட்டியின் பொருட்டு சமர்ப்பித்து வெற்றி பெறாத ஆக்கம் ஒன்றாகும் எனவும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் ஆலோசனைகளைப் பின்பற்ற இணங்குவதாகவும் வேறு எந்தவொரு பிரதேச செயலகப் பிரிவிலும் இப் போட்டியின் பொருட்டு கலந்து கொள்வதில்லை எனவும் இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திகதி ……………………………… ………………………………………

**விண்ணப்பதாரியின் கையொப்பம்**

## <u>விண்ணப்பதாரியின் வசிப்பிடத்தினை உறுதிப்படுத்தல்</u>

……………………………………………………………………………..........……………………என்ற

முகவரியில் வசிக்கும் சங்கைக்குரிய/திரு/ திருமதி/செல்வி ……………………………………………………… ………..ம் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டதாகவும் விண்ணப்பதாரி இக்கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிப்பவர் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ……………………………… ………………………………………………

**கிராம உத்தியோகத்தரின் கையொப்பமும் பதவி முத்திரையும்**

மேலே குறிப்பிடப்பட்ட சகல தகவல்களையும் பரீட்சித்ததாகவும், சரியானது எனவும் சிபாரிசு செய்கின்றேன்.

திகதி ……………………………… …………………………………………

**கலாசார உத்தியோகத்தர் / கலாசார அபிவிருத்தி உதவியாளர் / அபி. உத்தியோகத்தர்**கள்

மேலே குறிப்பிடப்பட்ட ஆக்கமானது போட்டியின் பொருட்டு தகுதியானது என அங்கீகரிக்கின்றேன்.

திகதி ……………………………… …………………………………………

**பிரதேச செயலாளர் கையொப்பமும் பதவி முத்திரையும்**

இணைப்பு.03

## பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய இலக்கியப் போட்டிகளின் பெறுபேறு - 2025
## சான்றிதழ்களை வழங்கும் மாதிரிப் படிவம்

மாவட்டச் செயலகம்: - ................................................

மொழி :- தமிழ்

| | பிரதேச செயலகத்தின் பெயர் | தேவையான சான்றிதழ்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
| 1 | | | | |
| 2 | | | | |
| 3 | | | | |
| 4 | | | | |
| 5 | | | | |
| 6 | | | | |
| 7 | | | | |
| 8 | | | | |
| 9 | | | | |
| 10 | | | | |
| 11 | | | | |
| 12 | | | | |
| 13 | | | | |
| 14 | | | | |
| 15 | | | | |
| 16 | | | | |
| 17 | | | | |
| 19 | | | | |
| 20 | | | | |
| 21 | | | | |
| 22 | | | | |
| 23 | | | | |
| 24 | | | | |
| 25 | | | | |
| | மொத்தம் | | | |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானது என உறுதிப்படுத்துகின்றேன்

தயாரித்தவர்:- ................................................

.......................................................

**மாவட்ட செயலாளரின் கையொப்பமும் பதவி முத்திரையும்**

கையொப்பம் :- ................................................

திகதி :- ...............................................